**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 1** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | புஷ்பராணி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **27.01.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். செப்பல் கடையில் வேலைபார்கிறேன். வழக்கில் இறந்துபோன மணிகண்டன் என்கணவராவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி முருகானந்தத்தை தெரியும். கடந்த 07.06.2020ம் தேதி மாலையில் என்கணவர் கடைக்கு போய்விட்டு வருவதாக சொன்னார். இரவு வரை வீட்டிற்கு வரவில்லை. சுமார் 09.00, 09.30 மணியளவில் என்பசங்களுக்கு சாப்பாடு ஊட்டிகொண்டிருக்கும்போது என்நாத்தனார் வீட்டிலிருந்து போன்செய்து BC ஆஸ்டல் அருகில் வைத்து என்கணவரை வெட்டிவிட்டதாக தகவல் சொன்னார்கள். அவர் போன்செய்து சொன்னவுடன் நாங்கள் புறப்பட்டு BC ஆஸ்டல் முன்னால் சென்றோம். அப்போது என்கணவர் தார்ரோட்டில் கழுத்து அறுபட்டு, வலதுபுறம் பின்புறம் வெட்டுபட்டு, கையில் கட்டைவிரல் வெட்டுபட்டு தொங்கிகொண்டிருந்தது. ரத்தம் நிறைய ஓடிபோய் அவர் இறந்திருந்தார். அங்கிருந்தவர்களை யார் இப்படி

பண்ணினார்கள் என்று விசாரித்தோம். டால்டா கண்ணன் (எ) ராஜு, பார்த்தா (எ) பார்த்திபன், ஆனந்த் (எ) முருகானந்தம், அய்யனார் அவர்கள் 4பேரும் வந்து என்கணவரிடம் Display போன செல்லை கொடுத்துவிட்டாய் என்றும், வேறு செல்கொடு அல்லது காசுகொடு என்று கேட்டுள்ளார்கள். காசுதரமுடியாது என்று என்கணவர் சொன்னவுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே பார்த்தா (எ) பார்த்திபன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து என்கணவரின் தலையில் வெட்டினார். பார்த்திபனிடம் அரிவாளை வாங்கி டால்டா கண்ணன் (எ) ராஜு வெட்டியுள்ளார். அப்போது என்கணவர் ஓடும்போது மயக்கத்தில் தடுமாறி கீழே விழுந்துள்ளார். அப்போது ஆனந்த் (எ) முருகானந்தம் அவர் மீது ஏறிநின்று பட்டா கத்தியால் அவர் கழுத்தை அறுத்துள்ளார். அறுத்துவிட்டு 3 எதிரிகள் கிழக்கு பார்த்து ஓடிவிட்டதாகவும், அய்யனார் டு வீலரில் சென்றுவிட்டதாகவும் சொன்னார்கள். அந்த விவரம் தெரிந்துவிட்டு போலிஸ் கம்பளைண்ட் கொடுப்பதற்காக நான், என்அம்மா மற்றும் நாத்தனார் ஆகியோர்கள் பெரம்பலூர் காவல்நிலையத்திற்கு போனோம். என்னால் புகார் எழுதிகொடுக்கமுடியவில்லை இந்த மாதிரி சொன்னார்கள் என்று சொன்னேன். நான் சொன்னதை அவர்கள் எழுதிகொண்டார்கள். நீங்கள் சொன்னது சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு கையெழுத்து போடசொன்னார்கள். நான் படித்து பார்த்துவிட்டு கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரை நான் கொடுத்தேன். அது அ.சா.ஆ.1, போலிசார் விசாரித்தார்கள்.

<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

எனக்கு எழுத படிக்க தெரியும். எனக்கு 2011ல் திருமணம் ஆனது. 07.06.2020ம் தேதி அன்று அவர் கடைக்கு போய்வருவதாக சொல்லிவிட்டு போகும்போது டீ சர்டும், வேஷ்டியும் அணிந்திருந்தார். எனக்கு ஷோபனா , சுமதி என்று இரண்டு நாத்தனார். அன்று 09.30 மணியளவில் என்நாத்தனார் வீட்டு செல்போனில் இருந்து என்னுடைய செல்போனுக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். நான் புகார் கொடுக்கும்போது என்நாத்தனார் ஷோபனாவின் வீட்டிலிருந்து எந்த நெம்பரிலிருந்து எந்த நெம்பருக்குபோன் செய்து தகவல்

சென்னார்கள் என்று சொல்லவில்லை. சுமார் 10.00, 10.30 மணியளவில் பெரம்பலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் முதல்விசாரணையில் தற்போது சொன்னவிவரத்தை புகாரில் சொன்னேன். எனக்கு போன்மூலம் தகவல் கிடைத்து BC ஆஸ்டல் அருகில் செல்லும்போது 09.30 மணிஇருக்கும். நான், என்நாத்தனார், மாமியார் போனோம். போலிசார்விசாரணையிலும், புகாரிலும் நாங்கள் யார் யார் போனோம் என்று பெயரை குறிப்பிட்டு குறிப்பாக சொல்லவில்லை. நாங்கள் போய் பார்க்கும்போது என்கணவரின் உடல் தெற்குபக்கமாக தலையும், வடக்குபக்கம் காலும்இருந்தது. புகாரில் என்கணவரின் தலையில் வலது புறம் பின்புறம் வெட்டுப்பட்டதாக சொன்னேன். கையில் விரல் வெட்டப்பட்டிருந்ததாக சொல்லவில்லை. நான் பார்க்கும்போது என்கணவரின் உடல் தலையிலும், கழுத்து வெட்டுபட்ட நிலையிலும் காயம் இருந்ததாக போலிசார் விசாரிக்கும்போது சொன்னேன். நான் என்கணவர் இறந்தஇடத்திற்கு செல்லவில்லை என்றும், அவரை பார்க்கவில்லை என்றும், அதனால் தான் அவர் உடலில் காயம் ஏற்பட்டிருந்த இடங்களை முழுமையாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தானாக அப்போது தான் அதிர்ச்சியில் இருந்ததாக சொல்கிறார். BC ஆஸ்டல் அருகில் வைத்து என்கணவரை எதிரிகள் வெட்டிவிட்டதாக தகவல் சொன்னார்கள். BC ஆஸ்டல் உள்ளே வைத்து வெட்டியுள்ளார்கள். என்கணவரை BC ஆஸ்டல் உள்ளே வைத்து வெட்டிய இடத்தை நான் பார்த்தேனா என்றால் உள்ளே போய் பார்க்கவில்லை, காம்போண்ட் சுவரில் என்கணவரின் ரத்தம் படிந்த கை இருந்தது. வெளிப்புற சுவரில் ரத்தக்கரை படிந்த கை அச்சு இருந்ததை பார்த்தேன். நான் பார்த்த இந்த விவரத்தை நான் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. என்கணவரை எதிரிகள் வெட்டிவிட்டதாக யார் தகவல் சொன்னார்கள் என்றால் என்கணவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக என்வீட்டில் வந்து எதிரிகள் பிரச்சனை செய்தார்கள். எதற்கு வீட்டில் வந்து பேசுறீர்கள், வெளியில் பேசிக்கொள்ளலாம் என்று

சொல்லியுள்ளார். வெளியில் தீர்த்து விடுவோம் என்று சொல்லியுள்ளார்கள். என்கணவருடன் சீட் விளையாடியவர்கள் எதிரிகள் தான் இந்த இந்த இடத்தில் வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். புகாரில் என்கணவருடன் சீட் விளையாடிய இந்த நபர் தான் மேற்படிவிவரத்தை சொன்னார் என்று நான் சொல்லவில்லை. ஆஸ்டலில் கேட் பூட்டியிருந்ததா, திறந்திருந்ததா என்ற விவரத்தை நான் சொல்லவில்லை. நான் என்கணவரின் உடலை சம்பவஇடத்தில் பார்த்தபோது என்உறவினர்களை தவிர லோகநாதன் மற்றும் எனக்கு தெரிந்தவர்கள் இருந்தார்கள். நான் பார்க்கும்போது என்உறவினர்களை தவிர லோகநாதன் மற்றும் எனக்கு தெரிந்தவர்கள் அங்கிருந்ததாக நான் சொல்லவில்லை. என்கணவர் இறந்த உடலுக்கு பக்கத்தில் யார் யார் வீடுகள் உள்ளது என்றால் பக்கத்தில் ஒருபோலிஸ்காரர் வீடு உள்ளது என்று எனக்கு தெரியும். அரசு மருத்துவமனை எதிரில் ஒரு நாத்தனார் வீடு உள்ளது. வேறு யார் வீடுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. புகாரில் முதல்பக்கம் மேல்புறத்தில் நான் தேதி குறிப்பிடவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், அதனால் தான் தேதியும், நேரமும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையம் செல்லும்போது இந்த வழக்கு 4 எதிரிகள் யாரும் அங்கில்லை. புகார் கொடுக்கும்போது போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்னர் போஸ்ட்மாட்டத்திற்காக மருத்துவமனையில் இருக்கும்போது விசாரித்தார்கள். என்கணவர் மீது திருச்சியில் ஒரு கொலைவழக்கு இருந்தது. பெரம்பலூர் காவல்நிலையத்தில் என்கணவர் மீது வழிப்பறி வழக்கு இருந்தது என்றால் சரிதான். அவர் மீது சரித்தர பதிவேடு பராமரிக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், என்கணவர் சம்மந்தப்பட்ட கொலைவழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வேண்டியவர்கள் அல்லது என்கணவருக்கு பிடிக்காத நபர்கள் கொலைசெய்துள்ளார்கள் என்றும், எதிரிகளுக்கு பிடிக்காத நபர்களின் தூண்டுதலின் பேரிலும், காவல்துறையினர் அறிவுறுத்தலின் பேரிலும் எதிரிகள்

மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>

4வது எதிரி மோட்டார்சைக்கிளில் சென்றதாக சொன்னார்கள். நான் புகாரில் 4வது எதிரியின் பெயரை சொன்னேன். 4வது எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.